# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII code of Criminal Procedure)

## IN THE COURT OF PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE AT TIRUVALLUR

## SESSIONS CASE NO.204/2018

| | |
|---|---|
| Deposition of Witness for | Prosecution PW8 |
| | Defence |
| | Court |

Name :

Father / Husband Name :

Village :

Taluk :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of $22^{nd}$ day of October 2024.

**(A1 to A3 are present. )**

# S.C. No. 204/2018

# 22.10.2024

**அ.த.சா.8- திரு. ராஜசேகர்**

சாட்சி சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு அரசுத் தரப்பில் முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறார்.

**முதல் விசாரணை**

நான் தற்போது தியாகராயநகரில் வசித்து வருகிறேன். சம்பவ காலத்தில் நான் பைக் ஷோரூமில் பணிபுரிந்து வந்தேன். கடந்த 12.10.2012 அன்று சம்பவம் நடந்தது. ராஜேஷ் என்பவர் பைக் ஷோரூம் வைத்திருந்தார். அவர் கடையின் பின்பக்க சுவர் உடைந்திருந்தது. இதுசம்மந்தமாக போலீசார் அதே வருடம், அதே மாதத்தில் சம்பவயிடமான விக்னேஷ்வரா நகரில் மோகன் என்பவரை விசாரணை செய்து கொண்டிருந்தார்கள். என்னுடன் பாண்டியன் என்பவரும் அந்த இடத்தில் இருந்தார். போலீசாரிடம் மோகன் தான் கடப்பாரை மூலமாக கடையை உடைத்ததாக கூறினார். கடப்பாரையை போலீசார் இடிந்த கடையின் உள்ளே இருந்து கைப்பற்றினார்கள். என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதல் கையெழுத்து என்னுடையது தான். இரண்டாம் கையெழுத்து பாண்டியன் என்பவர் உடையது ஆகும். என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள முதல் கையெழுத்து என்னுடையது தான். கடப்பாரையை யார் எடுத்து ஆஜர் செய்தார்கள் என்று எனக்கு ஞாபகமில்லை. போலீசார் என்னை விசாரித்தார்கள். தற்போது கூறிய விவரத்தை தான் போலீசார் விசாரணையிலும் கூறினேன்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை.**

நான் என்ன படித்துள்ளேன் என்றால் பிகாம் படித்துள்ளேன். சம்பவத்தின்போது பைக் ஷோரூமில் வேலை செய்தேன். பைக் ஷோரூமில் நான் வேலை செய்தேன் என்ற விவரத்தை போலீசார் விசாரணையில் கூறியுள்ளேனா என்றால் இல்லை. நான் இன்றைய

தினம் நீதிமன்றத்திற்கு யாருடன் வந்தேன் என்றால் ராஜேஷ் மற்றும் அன்பழகன் உடன் வந்தேன். ராஜேஷ் என் நண்பரா என்றால் என் நண்பர் இல்லை. சம்பவயிடத்திற்கு என்ன காரணத்திற்காக வந்தேன் என்றால் எனக்கு ஞாபகமில்லை. சம்பவயிட தெருவிற்கு அருகில் உள்ள கடைகள், வீடுகள் மற்றும் கடை எந்த திசையில் உள்ளது என்று சொல்ல முடியுமா என்றால் எனக்கு சொல்ல தெரியவில்லை. நானும் பாண்டியனும் சம்பவயிடத்திற்கு செல்லவில்லை என்றாலும் அதன் காரணமாகத் தான் கடையின் திசை மற்றும் அருகில் உள்ள கடைகள் பற்றி எனக்கு கூறமுடியவில்லை என்றால் சரியல்ல. கடைக்கு வலப்பக்கத்தில் மெக்கானிக் கடையும் இடப்பக்கத்தில் சலூன் கடையும் உள்ளது. அந்த கடைகளின் பெயர் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு ஞாபகமில்லை. பாண்டியன் சம்பவ காலத்தில் என்ன வேலை செய்தார் என்றால் கார் டிரைவராக இருந்தார். பாண்டியன் எனக்கு எப்படி பழக்கம் என்றால் பைக் ஷோரூமில் இருக்கும்போது அவர் பைக் வாங்க வரும்போது பழக்கம். மேற்படி விவரத்தை போலீசார் விசாரணை மற்றும் முதல் விசாரணையில் கூறியுள்ளேனா என்றால் இல்லை. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் கடை பெயர் என்ன என்றால் இன்டெக் என்று நினைக்கிறேன், சரியாக ஞாபகமில்லை. கடையின் உரிமையாளர் யார் என்று தெரியுமா என்றால் ராஜேஷ் என்று கூறினார்கள். எதிரி என் முன்னிலையில் வாக்குமூலம் கொடுக்கவில்லை என்றாலும் ஏற்கனவே எழுதி வைத்திருந்தார்கள் என்றால் விக்னேஷ்வரா நகரில் கடைக்கு அருகில் வைத்து போலீசார் எதிரியை விசாரித்தார்கள். எந்த தேதி, நேரம் என்றால் 2015ம் வருடம், தேதி, மாதம் எனக்கு ஞாபகமில்லை, 10.00 மணி முதல் 11 மணிக்குள் விசாரித்தார்கள். எந்த நிலை அதிகாரி என்னை விசாரித்தார் என்றால் எனக்கு தெரியாது. ராஜேஷ் என் நண்பர் என்பதால் அவர் கடையில் நடக்காத சம்பவத்திற்கு நான் பார்க்காத சம்பவத்திற்கு அவருக்கு அனுசரணையாக சாட்சியாக அளிக்கிறேன் என்றால் சரியல்ல. காவல் நிலையத்தில் போலீசார் தயார் செய்த ஒப்புதல் வாக்குமூலத்தில் நானும் பாண்டியனும் கையொப்பமிட்டோம் என்றால் சரியல்ல. பாண்டியன் என்பவர் என் நண்பர் இல்லை

என்றாலும் போலீசார் கூறியதால் அவரும் சம்பவயிடத்தில் இருந்ததாக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. ராஜேஷ் மற்றும் எதிரிகளுக்கு கடையை காலி செய்வது தொடர்பாக சிவில் நீதிமன்றத்தில் வழக்கு உள்ள விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. 2ம் எதிரியிடமிருந்து போலீசார் கடையை இடித்தற்கான பொருட்கள் எதையும் கைப்பற்றவில்லை என்றால் சரியல்ல. என்னை எப்போது விசாரித்தார்கள் என்றால் சம்பவம் நடந்து 10 நாட்கள் கடந்து அதே மாதத்தில் விசாரித்தார்கள். என் முன்னிலையில் 2ம் எதிரி ஒப்புதல் வாக்குமூலம் அளிக்கவில்லை என்றாலும் அவரிடமிருந்து எதுவும் கைப்பற்றவில்லை என்றாலும் ராஜேஷ்க்கு அனுசரணையாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

Typed to my dictation and correction
by me in open court read over to the
witness and admitted by him as correct

Sd/- J.Juliet Pushpa
Principal District and Sessions Judge,
Tiruvallur.